# வில்லியம் கேரி

ஆர். பாலா

சீர்திருத்த வெளியீடுகள்
சென்னை, இந்தியா

**வில்லியம் கேரி**

*ஆர். பாலா*


*முதல் பதிப்பு 2006*
*இரண்டாம் பதிப்பு: 2014*

*கிடைக்குமிடம்:*

**சீர்திருத்த வெளியீடுகள்**
*6/87 காமராஜர் தெரு,*
*திருவள்ளுவர் நகர்,*
*அயனாவரம்,*
*சென்னை 600023.*
*தமிழ்நாடு, இந்தியா.*
*தொலைப்பேசி: 9445671113*
*ஈமெயில்:* rpchennai23@gmail.com

கிறிஸ்தவ தமிழ் இலக்கியங்கள் குறித்த மேலதிக தகவல்களுக்கு www.biblelamp.org வலைப்பூவைப் பார்க்கவும்.

குறிப்பு: இப்புத்தகத்தில் இடம்பெற்றுள்ள அனைத்துப் படங்களும் இணையதளத்திலிருந்து எடுக்கப்பட்டவை.



"கர்த்தரிடமிருந்து பெருங் காரியங்களை எதிர்பாருங்கள்;
கர்த்தருக்காகப் பெருஞ் சாதனைகளைச் செய்யுங்கள்"

– வில்லியம் கேரி

# பொருளடக்கம்

நூல் அறிமுகம் .......... 7

கிறிஸ்தவ அனுபவமும், போதக ஊழியப் பணியும் .......... 9

பிறப்பும், வளர்ப்பும் .......... 9

கிறிஸ்தவ அனுபவம் .......... 10

முழுக்கு ஞானஸ்நானம் .......... 11

மிஷனரிப்பணி ஆர்வமும், அதற்கான முயற்சிகளும் .......... 17

“விசாரணை” .......... 17

கேரியின் இறவாப் பிரசங்கம் .......... 22

நவீன மிஷனரி ஊழிய ஆரம்பம் .......... 24

ஊழிய அழைப்பும், இந்தியப் பயணமும் .......... 27

குடும்பத்தோடு இந்தியாவில் கேரி .......... 30

இந்திய மண்ணில் கேரி .......... 31

இந்திகோ தொழிலில் மிஷனரி வில்லியம் .......... 34

டொரத்தி கேரியின் மனநிலை பாதிப்பு .......... 36

செராம்பூரில் வேத மொழிபெயர்ப்புப் பணி .......... 38

பிராமணர்கள் மத்தியில் பிரசங்கப்பணி .......... 42

கேரியின் பிள்ளைகள் .......... 45

கிருஷ்ண பாலின் கிறிஸ்தவ அனுபவம் .......................................... 47

பேராசிரியர் கேரி ......................................................................... 52
கர்த்தருக்காக ஆத்துமாக்கள் ..................................................... 55
இடைவிடா மொழிபெயர்ப்புப் பணி ............................................. 59

எதிர்பாரா எதிர்ப்புகளும், சோதனைகளும் ................................... 63
தொடரும் சோதனைகள் ............................................................. 66
கேரியின் குடும்பம் ..................................................................... 69
கேரியின் சுகவீனம் ..................................................................... 72
அச்சுப் பதிப்பகத்தை அழித்த பெருந் தீ ..................................... 74

செராம்பூர் கல்லூரி ..................................................................... 77
ஊழியத்திற்கு மறுபடியும் எதிர்ப்பு ............................................. 77
செராம்பூர் கல்லூரி ..................................................................... 78
செராம்பூர் மிஷனரிகளின் எதிர்காலத் திட்டங்கள் ..................... 83

கேரி காட்டும் வழி ..................................................................... 88
1. கர்த்தரின் அழைப்பு ............................................................... 92
2. திருச்சபைக்கு தந்த மதிப்பு ..................................................... 92
3. கடுமையான உழைப்பு ............................................................. 93
4. தாழ்மைக்கும், எளிமைக்கும் வாழ்வில் சிறப்பு ....................... 94

# நூல் அறிமுகம்

“நவீன மிஷனரி இயக்கத்தின் தந்தை” என்ற பெயரைப் பெற்றவர் வில்லியம் கேரி. சுவிசேஷத்தை உலகெங்கும் அறிவிக்க வேண்டும் என்ற வைராக்கியத்தோடு தான் சார்ந்திருந்த சபைப் பிரிவிற்கு ஊக்கமளித்து, அப்பணியைச் செய்யவும் தானே முன்வந்து இருநூறு உலக மக்களுக்கு சுவிசேஷத்தை அறிவிக்கும் பணியில் அக்காலத்தில் அவர் செய்துள்ள பணிகளுக்கு இணையாக உழைத்தவர்கள் இல்லை எனலாம். இந்திய மொழிகள் முப்பத்தைந்தில் வேதத்தை மொழிபெயர்த்தும், சபைகளை நிறுவியும், போதக ஊழியத்துக்கு ஊழியக்காரர்களைத் தயார் செய்தும் கேரி செய்துள்ள பணிகள் அசாதாரணமானவை. அவருடைய தியாகம் பெரிது. கர்த்தரின் பணியில் கேரி பட்டிருக்கும் இன்னல்கள் வார்த்தைகளால் விவரிக்க முடியாதவை. அனைத்தையும் பொறுத்துக் கொண்டு வாழ்நாள் முழுவதும் கர்த்தருக்காக உழைத்து இந்திய மண்ணிலேயே மறைந்த பெருமகன் கேரி.

கர்த்தரின் இறையாண்மையில் அளப்பரிய நம்பிக்கை வைத்து வளர்ந்தவர் கேரி. அவருடைய விசுவாசம் வேத அடிப்படையில் உருவான அசைக்க முடியாத விசுவாசம். கிருபையின் போதனைகளையும், சீர்திருத்தப் போதனைகளையும் இளமையில் இருந்தே கற்று வளர்ந்த கேரி அந்தப் போதனைகளின் அடிப்படையில் திருச்சபை ஊழியங்களை இந்தியாவில் உருவாக்கும் வைராக்கியத்தோடு இங்கிலாந்தை விட்டு வெளியேறினார். அவருடைய விசுவாசம் ஏட்டுச் சுரைக்காயாக இருக்கவில்லை. அவர் விசுவாசித்த கர்த்தரின் இறையாண்மை பொறுக்க முடியாத இன்னல்களுக்கு மத்தியிலும் அசையா நம்பிக்கையோடும் ஜெபத்தோடும் அவரைக் கர்த்தரில்

*தங்கியிருக்கச் செய்தது. "இரட்சிப்பு கர்த்தருடையது" என்று நம்பிய கேரி சுவிசேஷத்தைச் சொல்லுவது மட்டுமே தன் பணி என்று நம்பி ஆத்துமாக்கள் இரட்சிப்பை அடையும்படி பிரசங்க ஊழியத்தில் ஈடுபட்டு ஆத்துமாக்களின் இரட்சிப்புக்காக ஆவியின் கிரியையில் தங்கியிருந்தார். பல வருடங்கள் உழைத்தும் மனந்திரும்பிய ஒரு ஆத்துமாவைக்கூட காண முடியாத நிலையிலும், இந்நாட்டிலும் கர்த்தரின் மக்கள் இருக்கிறார்கள் என்று நம்பி உழைத்த சீர்திருத்தப் பெருமகன் கேரி. அவருடைய வாழ்க்கைச் சரிதம் உங்களுக்கு கேரி விசுவாசித்த கிறிஸ்துவில் அதிக விசுவாசத்தை உருவாக்கட்டும்; கேரி விசுவாசித்த சீர்திருத்தப் போதனைகளில் அதிக வாஞ்சையை ஏற்படுத்தட்டும்; கேரி நம்பி வாழ்ந்த திருச்சபையில் அதிக அக்கறை கொள்ளச் செய்யட்டும்.*

*"திருமறைத்தீபம்" பத்திரிகையில் கேரியின் வாழ்க்கை சரிதத்தை பல வருடங்களுக்கு தொடர்ச்சியாக எழுதி வந்திருக்கிறேன். அதை எழுதி வந்தபோது, கேரியின் வாழ்க்கையையும், பணிகளையும் மற்றும் விவரிக்காமல் அவற்றில் இருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டிய உண்மைகளையும் சேர்த்து விளக்கியிருக்கிறேன். இன்று நூலாக வெளிவந்திருக்கிறது அந்தத் தொடர். கேரியின் வாழ்க்கையும், அவர் கொண்டிருந்த விசுவாச வைராக்கியமும், அவர் செய்துள்ள திருச்சபை ஊழியப் பணிகளும் அவர் பாதையில் செல்லும்படி அநேகரை எழுப்ப உதவட்டும். திருச்சபைகள் தாங்கள் செய்ய வேண்டிய அதிமுக்கிய பணியான சுவிசேஷத்தை சகலருக்கும் அறிவித்து சபைகளை உருவாக்கும் பணியில் கேரியின் ஊழியம் அவர்களை ஊக்கப்படுத்தட்டும்.*

**ஆர். பாலா**

**ஆக்லாந்து, நியூசிலாந்து**

# கிறிஸ்தவ அனுபவமும், போதக ஊழியப் பணியும்

*இருநூறு ஆண்டுகளுக்கு முன்பாக, இங்கிலாந்தில் தோன்றிய நவீனகால மிஷனரி இயக்கத்தின் காரணகர்த்தாவாக இருந்த மனிதர்தான், லெஸ்டர் (Leicester) என்ற பிரதேசத்தில் வாழ்ந்த வில்லியம் கேரி என்பவர். கேரி இன்று நம்மத்தியில் இல்லை. ஆனால், அவரது சாதனைகளும், அச்சாதனைகளுக்குத் தூண்டுகோலாக அமைந்த, அவரது அசைக்க முடியாத நம்பிக்கைகளும் நம்மைவிட்டு என்றும் அகலாது. கேரியை நினைவுகூர்வதால் மட்டும், அவருடைய நம்பிக்கைகளின்படி நாம் நடக்கிறோம் என்று பொருளல்ல. அவருக்கு விழா எடுத்துவிடுவதால் மட்டும், அவர் காட்டிய வழியின்படி எல்லோரும் நடந்துவிடப் போவதுமில்லை. வில்லியம் கேரி யார் என்று எத்தனை பேருக்குத் தெரியும்? அவர் செய்த சாதனைகள்தான் என்ன என்று சரிவரப்புரிந்து கொண்டவர் யார்? சாவையே துச்சமாக மதித்து, பல இக்கட்டுகளுக்கு மத்தியில், இந்தியாவின் கல்கத்தாவிற்குச் சென்று, கிறிஸ்தவ ஊழியத்திற்காகத் தன்னையே செராம்பூரில் அர்ப்பணித்த, சான்றோராகிய கேரியின் சரிதத்தை நாம் அறிந்து கொள்ள வேண்டாமா?*

### பிறப்பும், வளர்ப்பும்

*ஐந்து குழந்தைகளின் மத்தியில் மூத்த மகனாக, கேரி, 1761 ஆம் ஆண்டு ஆகஸ்டு 17 ஆம் நாள் அவதரித்தார். அவருடைய தந்தை எட்மன்ட் ஒரு நெசவாளி. அவர் தன்னுடைய சொந்த முயற்சியாலும், திறமையினாலும் 1767 ஆம் ஆண்டில் பள்ளிக்கூட*



கேரி பிறந்து வளர்ந்த வீட்டை சித்தரிக்கும் படம்

வாத்தியாராக உயர்வு பெற்றார். இளம் வில்லியம் கேரிக்கு தாவரவியல், பிரயாண அனுபவங்கள் ஆகியவற்றில் அதிக ஆர்வமிருந்தது. பன்னிரண்டு வயதிருக்கும் போது, பள்ளிக் கூடத்தைவிட்டு விலகி தோட்டக்கலையில் ஆர்வம் காட்டினார் கேரி. ஆனால், தோல் வியாதியினால் பாதிக்கப்பட்ட வில்லியம், தோட்டக்கலையை விட்டுவிட்டு வேறு தொழில் தேட வேண்டிய நிலை ஏற்பட்டது. கேரியின் தகப்பனார், அவரைத் தன்னைப் போலவே சபைக் காரியங்களில் வைராக்கியமுள்ளவரும், பிட்டிங்டன் (Piddington) என்ற இடத்தில் காலணித் தொழிலில் ஈடுபட்டிருந்தவருமான கிளார்க் நிக்கலஸ் (Clark Nichols) என்பவரிடம், காலணித் தொழிலில் பயிற்சி பெற அனுப்பினார்.

## கிறிஸ்தவ அனுபவம்

கேரியோடு காலணித் தொழிலில் பயிற்சி பெற்ற, ஆங்கிலிக்கன் திருச்சபைக் கொள்கைகளை ஒப்புக்கொள்ளாத சக ஊழியனான ஜோன் வார் என்பவன், தன்னைப் போன்றவர்கள் ஹெக்கிள்டன் (Hackleton) என்ற இடத்தில் நடத்தும் ஒரு ஜெபக்கூட்டத்தில் கலந்துகொள்ள வருமாறு கேரியை அழைத்தான். ஆங்கிலிக்கன் சபையின் வழிமுறைகளின்படி, வைராக்கியத்தோடு வளர்ந்திருந்த கேரி, அச்சபைக் கோட்பாடுகளுக்கு எதிரான விதத்தில் ஆராதனைகளை நடத்திவந்த இக்கூட்டத்தாரை ஆரம்பத்தில் வெறுத்தார். ஜோன் வாரோடு வாக்குவாதத்தில் ஈடுபட்டார். தன்னுடைய வாதங்கள் போதிய வலிமையற்றிருந்தபோதும்,

தன் சபைக் கொள்கைகளை உறுதியாக எடுத்துரைக்க அவர் தவறியதில்லை. ஆனால், இறுதியில் தனது வைராக்கியத்தை இழந்து, ஜோன் வாரோடு அவருடைய ஆராதனைக் கூட்டங்களுக்குப் போனார். பின்னால், நாம் இப்படிச் செய்துவிட்டோமே என்று வருத்தப்பட்டுத் தமது குற்ற உணர்வை அகற்றிக்கொள்ள கேரி, தனது சொந்த சபையின் ஞாயிறு ஆராதனைகளில் மூன்று முறை கலந்துக் கொண்டார். ஜோன் வார், கேரிக்கு இயேசுவை அறிமுகப்படுத்த கடும் முயற்சிகள் எடுத்தார். தன் சுயமுயற்சியால், ஆன்மீக அறிவையும், சீர்திருத்தத்தையும் அடைய முயன்று எல்லாம் ஓய்ந்த பின்பு, கேரி 1779 ஆம் ஆண்டில் கிறிஸ்துவை அறிந்து கொள்ளும் அனுபவத்தைப் பெற்று, ஆங்கிலிக்கன் திருச்சபைக்கு எதிரான கூட்டத்தாரோடு சேர்ந்தார். அந்திரேயா, தன் சகோதரனான பேதுருவுக்கு இயேசுவை அறிமுகப்படுத்தியது போல, பொட்டஸ்புரி (Potterspury) இளைஞனான ஜோன் வார் போலஸ்புரி (Paulerspury) வாலிபனான கேரியின் ஆன்மீக வாழ்வுக்கு வழிகாட்டியாக அமைந்தார். இந்தியாவின் நவமணி, இயேசுவின் மணிமுடியில் அணிகலனாக அமைந்ததில், தனக்கும் பங்கிருக்கின்றது என்று ஜோன் வாருக்கு அப்போது தெரிந்திருந்ததா என்ன?

## முழுக்கு ஞானஸ்நானம்

கிறிஸ்தவ அனுபவத்தைப் பெற்றுக்கொண்ட நாள் முதல், வேதத்தில் இருந்துதான் எல்லா அறிவையும் பெற வேண்டும் என்ற தாகத்தோடு அதைப் படிக்கத் தொடங்கினார் கேரி. அத்தகைய விசுவாசத்தோடு கூடிய வேத ஆராய்ச்சி, குழந்தை ஞானஸ்நானத்தைப் பற்றி அவர் மனதில் கேள்வி எழுப்பியது. குழந்தை ஞானஸ்நானத்திற்கும், விசுவாசத்தாலேயே ஒருவன் நீதிமானாக்கப்படுகிறான் என்ற புதிய ஏற்பாட்டுப் போதனைக்கும் இடையில் உள்ள வேறுபாட்டை அவர் உணர்ந்தார். இதை மேலும் ஆராய்ந்த பின்னர், குழந்தை ஞானஸ்நானக் கொள்கையை அவர் முற்றாகக் கைகழுவினார். கிறிஸ்துவை விசுவாசிப்பவர்கள் மட்டுமே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற வேதத்தின் தெளிவான போதனையைப் பின்பற்றி முழுக்கு ஞானஸ்நானத்தையும் பெற்றுக்கொண்டார்.

வில்லியம் கேரியின் ஆரம்பகால கிறிஸ்தவ வாழ்வின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்தோர் அநேகர். அவர்களில்